ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள்
முன்னிலை – திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால்,பி.எஸ்.சி,

ந.க.எண்.4337 /2025 /எப்1. நாள். 10.03.2026.

பொருள் : மனைப்பிரிவு – ஆத்தூர் நகராட்சி – எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு–எப் , பிளாக்–8 , பழைய நகரளவை எண்–17/4, புதிய நகரளவை எண் 17/22, பழைய சர்வே எண். 598/1, 598/2 Part –இல் அமைந்துள்ள 0.915 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் திரு.P.ஜெயபாரத் என்பவரால் 17 மனைகளாக பிரிவு செய்யப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு.P.ஜெயபாரத் என்பவரது மனு நாள். 08.12.2025
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித ந.க.எண். எண். SLM/24I29MXZ/55946/2025/2025//TCP நாள்.04.12.2025
3. நகர்மன்ற தீர்மான எண்.240, நாள்.31.12.2025.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.09.03.2026

****

உத்தரவு:

பார்வை 1–இல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு–எப் , பிளாக்–8 , பழைய நகரளவை எண்–17/4, புதிய நகரளவை எண் 17/22, பழைய சர்வே எண். 598/1, 598/2 Part –இல் அமைந்துள்ள 0.915 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் திரு.P.ஜெயபாரத் என்பவரால் 17 மனைகளாக பிரிவு செய்யப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு இறுதி ஒப்புதல் வழங்க கோரியுள்ளீர்.

பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தில் ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு–எப் , பிளாக்–8 , பழைய நகரளவை எண்–17/4, புதிய நகரளவை எண் 17/22, பழைய சர்வே எண். 598/1, 598/2 Part –இல் அமைந்துள்ள 0.915 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு இறுதி ஒப்புதல் (SWP/DTCP/SALEM/Layout NO) மா.வ/ந.ஊ.உ.இ (சே.மா) எண்.411 /2025 என எண்ணிடப்பட்டு பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.240, நாள்.31.12.2025.–ல் சிறப்பு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மனைப்பிரிவு அனுமதி அளிப்பதற்கான கட்டணங்களை வசூலிக்கவும், பொது உபயோக இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யவும், அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டபின் மேற்படி மனைகளுக்குண்டான கட்டணத்தை செலுத்திய பின்னர் இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.20000 /– கூராய்வு கட்டணம் ரூ.5000/– வைப்புத் தொகை ரூ.1,00,000/– கொடிநாள்ரூ.10000/– ஆகிய கட்டணங்கள் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதற்கான நகலை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4–இல் காணும் அறிவிப்பின் படி அனுமதி கட்டணம் ரூ.20000/– கூராய்வு கட்டணம் ரூ.5000/– வைப்புத் தொகை ரூ.1,00,000/– கொடிநாள்ரூ.10000/– ஆகிய கட்டணங்களை பற்றுச்சீட்டு எண் 045/01/5/25–26/0004620 நாள்.10.03.2026 அன்று இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளீர்.

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

Online Registration No.	Village	Ward	Block No.	T.S.No / R.S.No	Plot No.	Extent In(Acre)
24 I 29 MXZ	ATTUR	F	8	பழைய நகரளவை எண்–17/4, புதிய நகரளவை எண் 17/22, பழைய சர்வே எண். 598/1, 598/2 Part	1 to 17	0.915

நிபந்தனைகள்

1. அரசாணையின்படி, குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மட்டுமே இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / மனைகுடியிருப்பு உட்பிரிவி7ற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ஆணை எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
3. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள்.04.02.2019–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள் 31.01.2020–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனையிட வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனை உட்பிரிவின் நுழைவாயிலில் 6x4அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.

ஆணையாளர்,
ஆத்தூர் நகராட்சி.

பெறுநர்:
திரு.P. ஜெயபாரத்,
118/101 புதுப்பேட்டை,
தெற்குகாடு,
ஆத்தூர்.

நகல்: சார் பதிவாளர், ஆத்தூர்,
நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம்.